


## கூட்டணி குழப்பங்களும் விகிதாச்சார முறையும்

டெல்லிக் குழப்பத்தைத் தீர்க்க மறுபடியும் தேர்தல்தான் ஒரே வழி என்று இப்போது அநேகமாக எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொள்ளும் நிலை வந்துவிட்டது.

எப்போது தேர்தல், அதுவரை யார் இடைக்காலப் பிரதமர் என்பது மட்டுமே இப்போது தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள்.

இப்போது யார் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர் ஆட்சியும் ஓரிரு எம்.பி.க்கள் வித்தியாசத்தில் மட்டுமே இருந்துகொண்டிருக்கும். அத்தகைய பிரதமர் அதிகபட்சம் ஏழெட்டு மாதங்கள் நீடிக்க முடியும். தன் ஆதரவு எம்.பி.க்களுடன் மிக அதிகபட்ச சமரசம் செய்துகொண்டு நாற்காலியைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சித்தால்கூட வாஜ்பாய் மாதிரி குறைந்த காலமே நீடிக்கமுடியும். நரசிம்மராவுக்குப் பிறகு மைனாரிட்டி ஆட்சியாகத் தொடங்கி மெஜாரிட்டி ஆட்சியாகத் தன்னை மாற்றிக் கொள்ளும் 'வல்லமை' படைத்த பிரதமர்கள் யாரும் வரவில்லை.

**லாபமும் நஷ்டமும்:**

நடந்து முடிந்த ஆட்சிக் கவிழ்ப்பில் ஏறத்தாழ எல்லாக் கட்சிகளுமே சில லாபங்களையும் சில நஷ்டங்களையும் அடைந்திருக்கின்றன.

காங்கிரஸைப் பொறுத்தவரையில் சோனியா காந்தி பி.ஜே.பி. ஆட்சியைக் கவிழ்க்க விரும்பாதவராகத்தான் இருந்தார். நவம்பர் வரை பொறுத்திருந்து, மேலும் பி.ஜே.பி-யுடன் மக்கள் அதிருப்தி அடைந்தபிறகு தேர்தலைச் சந்தித்தால், தனக்கு நல்லது என்பதே அவருடைய கணக்காக இருந்தது. அப்படி நடக்காதது அவருக்கு இழப்பு தான். அதனால் திடீரென்று ஜெயலலிதாவுடன் ஓரணியில் நிற்கிற நிலை ஏற்பட்டுவிட்டது. இது மற்றொரு இழப்பு. இல்லாவிட்டால், நவம்பரில், சோனியா தி.மு.க. - த.மா.கா. கூட்டணியை ஏற்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தன.

இப்போதைக்கு சோனியாவுக்குக் கிடைத்த லாபம், இடதுசாரிகளும் லல்லுபிரசாத் யாதவும் காங்கிரஸுக்கு பகிரங்கமாக ஆதரவு நிலை எடுத்தது மட்டும்தான். இதுவும் தேர்தல் வருவது தாமதமானால், மாறக்கூடிய வாய்ப்பு உண்டு. இந்த முறை ஆட்சியமைக்க முயற்சித்ததில், கிடைத்த கசப்பான அனுபவங்கள், அடுத்த தேர்தலில் யார் யாருடன் எப்படி உறவு வைக்கமுடியும் என்பதற்கான படிப்பினையாக காங்கிரஸுக்குப் பயன்படும் என்பது ஒரு லாபம்தான்.

பி.ஜே.பி-யுடைய நஷ்டங்கள் ,அது யாரைப் பற்றியும் கவலைப்படாமல் தான் விரும்பியபடியெல்லாம் இந்திய அரசியலின், நமது சமூகத்தின் அடிப்படைகளைப் பாதிக்கக்கூடிய முடிவுகளை எடுக்கக்கூடிய அதிகாரத்தை இழந்துவிட்டது என்பதுதான். ஐம்பதாண்டு வெளியுறவுக் கொள்கையை திடீர் அணுகுண்டு வெடிப்பினால் மாற்றியமைத்தது ஒரு உதாரணம்.

அதேசமயம் ஆட்சிக் கவிழ்ப்பால் பி.ஜே.பி-க்கு இரண்டு பெரிய லாபங்கள் கிட்டியுள்ளன. முதலாவது, இன்னும் அதிக காலம் ஆட்சியில் இருந்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய மக்கள் அதிருப்தியை சம்பாதிப்பதற்கு பதிலாக, "நல்லவரான' வாஜ்பாய் பதவி இழந்ததால் ஏற்பட்ட அனுதாபம். இரண்டாவது லாபம், ஜெயலலிதா மாதிரி தொல்லை பிடித்த தோழமைக் கட்சியைக் கழற்றி விட்டுவிட முடிந்தது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், சென்றமுறை ஜெயலலிதாவால், பி.ஜே.பி. லாபமடைந்தது. இந்த முறை தி.மு.க-வால் பி.ஜே.பி-க்கு லாபம் கிடைக்குமா அல்லது பி.ஜே.பி. உறவால் தி.மு.க-வுக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது தேர்தல் எவ்வளவு தூரம் தள்ளிப் போகிறது என்பதைப் பொறுத்ததாகும்.

இடதுசாரிக் கட்சிகளுக்கு, தாங்கள் கடுமையாக எதிர்க்கும் மதவாதக் கட்சியான பி.ஜே.பி-யின் ஆட்சிக் காலம் எவ்வளவு குறைந்தாலும் அது லாபம்தான். அதேசமயம், பி.ஜே.பி., காங்கிரஸ் இரண்டும் அல்லாத மூன்றாவது அணியை உருவாக்குவதில் கடந்த காலங்களில் அது முன்கை எடுத்துச் செயல்பட்டுவந்தது இப்போது முடியாமல் போய்விட்டது பெரிய இழப்பாகும்.

**<u>ஓரணியில் தி.மு.க. + 'ஜெ'</u>**

எந்த லாபமும் அடையாமல் நஷ்டம் மட்டுமே அடைந்திருப்பதில் ஓரணியில் இருப்பவர்கள் தி.மு.க-வும் ஜெயலலிதாவும்தான் (பொதுமக்களும்தான் என்பது தனிக்கதை).

நம்பிக்கை வாக்கெடுப்பில் பி.ஜே.பி. தப்பிவிடும்; அதன் பிறகு ஆட்சியில் பல பொறுப்புகள் அதிகாரங்கள் கிட்டும்; ஜெயலலிதாவுக்கு மத்தியிலும் செல்வாக்கு போய்விடும். அவரை அரசியலில் ஒழித்துக் கட்டுவது இன்னும் சுலபமாகிவிடும் என்றெல்லாம் தி.மு.க. வைத்திருந்த கனவுகள் தவிடுபொடியாகிவிட்டன. அரசனை நம்பி புருஷனை இழந்த கதையாக, பி.ஜே.பியுடன் கூட்டு சேர்ந்ததால், இத்தனை காலமாக மதவாதத்துக்கு அணை போடக்கூடிய ஒரே திராவிடக் கட்சி என்று உருவாக்கி வைத்திருந்த பிம்பமும் அடிபட்டுவிட்டது.

ஜெயலலிதா நிலைமை 'ஆபரேஷன் வெற்றி; ஆனால், நோயாளி செத்தாயிற்று' என்ற கதைதான். தன் மீதுள்ள வழக்குகளின் கடுமையைக் குறைப்பதற்கோ, தி.மு.க. அரசைக் கவிழ்ப்பதற்கோ பி.ஜே.பி-யைவிட அதிகமாகத் தனக்கு உதவக்கூடிய ஆட்சியை அவரால் டெல்லியில் ஏற்படுத்த முடியவில்லை. டெல்லி ஆட்சியில் பங்கேற்று வந்த நிலை மாறி, தங்களுக்கு அமைச்சரவையில் இடம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, உங்களை ஆதரிக்கிறோம் என்று காங்கிரஸிடம் சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

தி.மு.க., நண்பர்களை எதிரிகளாவும் , எதிரிகளை நண்பர்களாகவும் மாற்றிக் கொண்டிருக்கிறது என்றால், ஜெயலலிதாவுக்கு எல்லாருமே எதிரிகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். இதில் இருந்து மீண்டு வருவதற்கு அவர் காங்கிரஸ், பி.ஜே.பி. அல்லாத வட இந்திய மூன்றாவது அணிக் கட்சிகளுடன் பலமான உறவை ஏற்படுத்திக்கொண்டு மாற்று அரசு அமைத்தால் மட்டுமே முடியும். இந்த ரீதியில் அவர் யோசிக்க ஆரம்பித்துவிட்டதாகத் தெரிகிறது.

**<u>யாருக்கு லாபம்:</u>**

நடந்து முடிந்த(?) அரசியல் குழப்பத்தில் யாருக்காவது கொஞ்சம் லாபம் உண்டென்றால், அது தெலுங்கு தேசம், முலாயம் சிங்கின் சமாஜ்வாதிக் கட்சி, காஷ்மீரத்தின் தேசிய மாநாடு, த.மா.கா. முதலிய கட்சிகளுக்குத்தான்.

தெலுங்கு தேசமும் தேசிய மாநாடும், பாரதிய ஜனதாவை ஆதரித்தாலும் லாபம், ஆதரிக்காவிட்டாலும் லாபம் என்ற நிலையில் இருக்கின்றன. மாநில அளவில் காங்கிரஸ்தான் அவற்றின் பிரதான எதிர்க்கட்சி என்பதால், காங்கிரஸை டெல்லியில் ஆட்சி அமைக்கவிடாமல் தடுப்பது சந்திரபாபு நாயுடுவுக்கு லாபம்.

த.மா.கா-வுக்கு மாநிலத்தில் தனியே இருக்கும் செல்வாக்கு குறைவுதான். என்றாலும், தற்போது பி.ஜே.பி-க்கு எதிர்ப்பு, 'ஊழல்' ஜெயலலிதா உறவு இல்லாத காங்கிரஸ் அணிக்கு மட்டுமே ஆதரவு என்ற நிலை அதற்கு ஓரளவு மரியாதையை ஏற்படுத்தித்தருகிறது.

**முலாயமின் மூன்றாவது அணி**

இந்த அரசியல் குழப்பத்தில், மேம்போக்காகப் பார்க்கும்போது, காங்கிரஸை ஆட்சியமைக்க விடாமல் முலாயம்சிங் யாதவ் முட்டுக்கட்டை போட்டது முரட்டுத்தனமாகத் தோன்றினாலும், தொலைநோக்கு அரசியல் ரீதியாக அவரது அணுகுமுறையில் மிகுந்த அர்த்தங்கள் உள்ளன.

உத்தரப்பிரதேச மாநில அரசியலைப் பொறுத்தமட்டில், அங்கு மதவாதத்தை ஆதரிக்காத இந்துக்கள், பிற மதத்தினர், பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் முதலியோரின் ஆதரவு தனக்கா, காங்கிரஸுக்கா என்ற போட்டியை முலாயம்சிங் யாதவ் சந்தித்தாக வேண்டும். காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக் கொண்டால், முலாயத்தின் ஆதரவு வோட்டுகள் காங்கிரஸுக்குப் போய்விடும் என்பது உடனடி ஆபத்து.

ஆனால், தொலைநோக்கில் பார்க்கும் போது, காங்கிரஸா, சமாஜ்வாதியா என்று மட்டுமே தேர்தல் களம் அமையுமானால், அது பி.ஜே.பி-யைப் பலவீனப்படுத்திவிடும். அதாவது மதச்சார்பின்மையைக் கொள்கையாகக் கொண்டுள்ள இரண்டு அணிகளில் ஏதோ ஒன்றுதான் மாறி மாறி ஆட்சிக்கு வர முடியும் என்ற நிலையை ஏற்படுத்தும். பொருளாதாரத் துறையில் இதில் எது வலதுசாரி, எது இடதுசாரி என்ற வேறுபாடு மட்டுமே முன்னுரிமை பெறும்.

இதே போல ஆந்திரத்தில் , தெலுங்கு தேசமா, காங்கிரஸா, கர்நாடகத்தில் ஜனதாதளமா, காங்கிரஸா, கேரளா, வங்காளம் முதலியவற்றில் காங்கிரஸா இடதுசாரிகளா என்று மட்டுமே மக்கள் தீர்மானிக்கும் அரசியல் வலுப்பெறும். அப்போது மதவாதக் கட்சி எதுவும் பின்னுக்குத் தள்ளப்பட்டுப் பலவீனப் படுத்தப்படலாம். இத்தகைய அரசியல் நிலைமைதான் இந்தியாவில் எண்பதுகளின் இறுதி வரை இருந்து வந்தது. பத்தாண்டுகளில் கூட்டணிகளின் அடிப்படை மதவாதம், மதச்சார்பின்மை என்று மாறிவிட்டது. பழைய நிலைக்கு இதை எடுத்துச் செல்ல முலாயம்சிங்கின் அணுகுமுறை உதவுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியதாகும்.

**தேர்தல் தீர்வுதானா?**

தற்போது டெல்லியில் நிலவும் குழப்பம், நிலையாமை எல்லாம் முடிவுக்கு வரவேண்டுமானால், தேர்தல் தான் ஒரே தீர்வு என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

ஆனால், மறுபடியும் இதே மாதிரி யாருக்கும் தனியாக அறுதிப்பெரும்பான்மை இல்லாத இழுபறி நிலை அந்தத் தேர்தலின் முடிவிலும் வராது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

கடந்த பத்தாண்டுகளாக (1988-லிருந்து) நடந்த எந்தத் தேர்தலிலும், டெல்லியில் எந்தத் தனிக் கட்சிக்கும் முழு தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை என்பது முக்கியமானது. இதற்குக் காரணம், மக்கள் வாக்களிக்கும் அணுகுமுறைகள் மாறிவிட்டதுதான்.

வட்டாரம், மாநிலம், மொழி, சாதி ஒடுக்குமுறை முதலிய அடிப்படைகளில் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிற கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகள் உருவாகி வருகின்றன.

அதிகாரத்தை டெல்லியிலோ, சென்னையிலோ குவித்து வைக்கும் போக்குக்கு இவை எதிரானவை. கூட்டாட்சி முறையை நோக்கி அரசியலை இவை நகர்த்துகின்றன. ஆனால், மாறி வரும் இந்த சூழலைப் பிரதிபலிக்கக்கூடியதாக நமது பழைய தேர்தல் முறை இல்லை.

**நிரந்தரத் தீர்வு என்ன?**

தேவைப்படும் முதல் சீர்திருத்தம் தற்போதுள்ள 'சிம்பிள் மெஜாரிட்டி' முறையைக் கைவிடுவதாகும். ஒவ்வொரு தொகுதியிலும் 'அ' கட்சி இருபதாயிரம் வாக்குகள் பெறுகிறது. 'ஆ' கட்சி இருபத்தோராயிரம் வாக்குகள் பெறுகிறது என்றால் எல்லா ஸீட்டும் 'ஆ'வுக்கே. 'அ'வுக்கு ஒரு ஸீட்டும் இல்லை .

எப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் வேண்டும் என்பது பரவலாக விவாதிக்கப்பட வேண்டும். சில யோசனைகளை இங்கே பார்க்கலாம்.

1. எந்தத் தொகுதியிலும் வேட்பாளர்கள் கூடாது. வாக்களிப்போர் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும். எல்லா தொகுதிகளிலுமாக ஒரு கட்சி பெற்ற மொத்த வாக்குகளின் சதவிகித அடிப்படையில் ஸீட்டுகள் அளிக்கப்பட வேண்டும். மொத்தம் நூறு எம்.எல்.ஏ. ஸீட்டுகள் என்றால், முப்பது சதவிகித வாக்குகள் பெற்ற கட்சிக்கு முப்பது லீட்டு; 3 சதவிகித வாக்குகள் பெற்ற கட்சிக்கு மூன்று மீட்டு என்பதாக இது அமையும்.

2. தான் பெற்ற இடங்களுக்கு யார் யாரை எம்.எல்.ஏ-வாக நியமிக்கிறோம் என்று பிறகு கட்சி அறிவிக்கும். அப்படி அறிவிக்கப்பட்டவர் சரியான நபர் அல்ல என்று மக்கள் தெரிவிக்க வகை செய்யப்பட்டு, அவரைக் கட்சி திரும்பப் பெற்றுக்கொண்டு வேறொருவரை நியமிக்க உரிமை வேண்டும்.

3. இந்த முறைப்படி எம்.எல்.ஏ-க்கள் மாநிலம் முழுவதற்கும் பொது. அவர்களுக்கென்று தனித்தனி தொகுதிகள் தேவைப்படாது. குடிநீர், விளக்கு, சாக்கடைப் பிரச்னைகள் எல்லாம் இன்னும் கீழ்மட்டத்தில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளோடு முடிக்கப்பட வேண்டும்.

4. டெல்லியில் மாநிலங்களவை, மக்களவை என்று இரண்டு தேவை இல்லை. ஒரு அவை போதும். இதற்கும் நேரடித் தேர்தல் தேவை இல்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம்.எல்.ஏ-க்கள், குறிப்பிட்ட அளவு எம்.பி.க்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பலாம். எம்.பி-க்களுக்கும் தொகுதிப் பிரச்னை இராது. எம்.பி. தேர்தலை நேரடி முறை இல்லாமல், மாநில எம்.எல்.ஏ-க்கள் மட்டுமே தேர்தெடுப்பதாக அமைப்பதால், மாநில மக்களின் உணர்வு கீழிருந்து மேல் வரை சீராகப் பிரதிபலிக்கப்படும். முரண்பாடுகள் தவிர்க்கப்படும்.

மேற்கண்ட சீர்திருத்தங்களினால், மக்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் பிரதிநிதித்துவம் பெறும்.

இவை தவிர, தேர்தல் செலவு முறைகள், தொழிலதிபர்களின் பகிரங்க நன்கொடை முறை போன்ற சீர்திருத்தங்களும் வரும் தேர்தலுக்கு முன்பாகவே மேற்கொள்ளப்படவேண்டும்.

வேறு கட்சி கொண்டுவந்த பட்ஜெட்டை, நிறைவேற்றித் தரும்படி குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டதும் எல்லாக் கட்சிகளும் திருத்தங்கள் செய்யாமல் நிறைவேற்றித் தந்துள்ளன. இதே போல எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய தேர்தல் சீர்திருத்தங்களை சட்டமாக நிறைவேற்றிவிட்டு அடுத்த தேர்தலைச் சந்தியுங்கள் என்று குடியரசுத் தலைவர் சொல்ல வேண்டும். சீர்திருத்தங்கள் செய்யப்படாமல், தேர்தல் மறுபடியும் நடந்தால், கூட்டணிக் குழப்பங்கள் மறுபடியும் மறுபடியும் தொடரும்.

- ஆனந்த விகடன்

**2.5.99**